
பாலைவனப்
போர்

மெக்சிகோவில் ஒரு மலைப் பகுதி. ஒரு குதிரை வீரன் தன்னந்தனியே பாய்ந்து சென்றுகொண்டிருந்தான்.
டைமண்டு! அவன் வேலையை முடிப்பானா?
நிச்சயமாக! அவன் பலே ஆள்!

டென்வெரில் ஜேம்ஸின் மாடுகளுக்கு நல்ல விலை கிடைக்கிறது!

என் மந்தை விலை போவதே இல்லை! ஜேம்ஸை ஒழித்தால்தான் நான் வாழ முடியும்!

அதேநேரம்—
நலல செய்தியா,
ஆமாம், லிண்டா!

உங்களுக்காக பாஸ் காத்துக் கொண்டிருக்கிறார்!
அவரைப் பார்க்கத்தான் போகிறேன்.

தாமஸ்சின்
அலுவலக அறை
பாட்! நமது காளைகள்
நாளை டென்வரில்
இருக்க வேண்டும்!
இருக்கும்
பாஸ்!

இந்தக் காளைகள்
வந்துவிட்டால், நம்
மந்தைதான்
மெக்சிகோவில் சிறந்த
மந்தையாக இருக்கும்.
டைமனுக்கு
வயிறு பற்றி
எரியும்!

இல்லை! இல்லை! பாட் அப்படி சொல்லாதே! டைமனும் வாழட்டும்! அவருக்கு எல்லா உதவியும் செய்ய நான் தயார்!
துணைக்கு மூணு பேரை அழைத்துக்கொள். நாளை அதிகாலையில் புறப்பட்டு விடு, பாட்
ஓ.கே. பாஸ்!
பாட் நண்பர்களை சந்தித்தான்.
பெரிய மந்தை அல்ல. ஆறே ஆறு காளைகள்தான்! டென்வருக்கு! நாம் ஓட்டிப்போக வேண்டும்.

காளைகள் ஐரோப்பாவில் இருந்து வந்தவை ஏகபபட்ட விலை. நம் உயிரைக் கொடுத்தாவது காளைகளைக் காக்க வேண்டும்.
ஆலன் ஆண்டர்சன் ஸ்பென்சர் மூவரும் என்னுடன் வாருங்கள. நாளை அதிகாலையே கிளம்ப வேண்டும். இன்று போய் இரவில் சீக்கிரம் படுத்துக்கொள்ளுங்கள்.

டென்வர் போகிறோம்! கைநிறைய சம்பாதித்து விடலாம்!
ஆனால், ஆலன்... பாவம்!

ஆலன், எங்கே போகிறாய்? வா படுத்துக் கொள்ளுவோம்!
நீங்கள் படுங்கள். நான் வருகிறேன்.

ஆலன் தனியே வந்தான்.
டென்வர் போய் வர இரண்டு வாரம் ஆகுமே?
இவ்வளவு காலம் எப்படிப் பிரிந்திருப்பேன!

பூட்டியிருந்த ஒரு வீட்டை அவன தட்டினான்.
டொக்!
ஓ! ஆலன்! நீயா?
நாளைக் காலை நான் டென்வர் கிளம்புகிறேன், உன்னைப பார்த்துப் போக வந்தேன். உள்ளே வரலாமா?

போய் விடு ஆலன். அப்பா பார்த்தால் ஆபத்து.
உன்னை நான் மணந்துகொள்ள விரும்புகிறேன். இது குற்றமா, லிண்டா?

எனக்கும் உன் மீது ஆசைதான், ஆலன். ஆனால், இதை எப்படி அப்பாவிடம் சொல்லுவது என்றுதான் பயப்படுகிறேன்.

அதேநேரம்— ஜேம்ஸ் அலுவலகத்தில்
பாட்! உன்னுடன் யார், யார் வருகிறார்கள்? இந்தா உன் வழிச் செலவுக்குப் பணம்!

பாட்! இந்தக் காளைகள்தான் என் சொத்து என்பதை உனக்குத் சொல்ல வேண்டியது இல்லை!
என் மகள் விண்டாவைப் போல காளைகளைப் பார்த்துக் கொள்கிறேன், பாஸ்!

அதேநேரம் அந்தக் குதிரை வீரன் வேகமாகத் திரும்பி வந்து கொண்டிருநதான்.,

அவன் டைமண்டு அலுவலகத்துக்கு வந்தான்.
பாஸ்! நாளைக் காலை காளைகளுடன் டென்வா கிளம்புகிறார்கள்!
ஆனால், அவர்கள் டென்வர் போய்ச் சேரமாட்டார்கள்.!

நல்ல செய்தி கொண்டு வந்தாய் இந்தா வைத்துக்கொள்!
மிகவும் நன்றி பாஸ்!
அந்த ஆள் போனதும்...
எப்படியாவது ஜான்சனை சந்திக்க வேண்டும்..
பணத்துக்காக அவன் எதுவும் செய்வான்!

எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுக்கலாம். ஆனால், வேலை முடியவேண்டும். அதே நேரம் என் பெயரும் வெளியே தெரியக்கூடாது!

கவலைப்படாதீர்கள், டைமண்டு! வேலை கச்சிதமாக முடிந்து விடும்.
ஒரு காளைகூட டென்வர் போய்ச் சேரக்கூடாது!


ஜேம்ஸ் ஆடன் பேசி
முடித்து, பாட் வீட்டுக்குக்
கிளம்பினான்.


பாட் வீட்டை நெருங்கியபொழுது...
உள்ளே பேச்சுக்
குரல் கேட்கிறதே.
யார்?

யாட் சன்னல் வழியே பார்த்தான்.
ஆலன்! அவனுக்கு சரியான பாடம் கற்பிக்க வேண்டும்!

பின் வழியாக பாட் வீட்டுக்குள் நுழைந்தான்!
ராஸ்கல்! எவ்வளவு தைரிய மிருந்தால், என் மகளை வந்து பார்ப்பாய்!
நாங்கள்... ஒருவரை ஒருவர் விரும்புகிறோம், அப்பா.

அடிமை நாயே! பல்லை உடைப்பேன்!
நான் தவறாக...

பேசாதே! என்னிடம் கைநீட்டிக் கூலி வாங்கும் கழுதை நீ! உனக்கு என் மகள் வேண்டுமா?

உனக்கு சரியான பாடம் கற்பிக்கிறேன். அப்பொழுதுதான் நீ பெண்களிடம் வாலாட்டாமல் இருப்பாய்!
வேண்டாம், அப்பா! அவரை விட்டுவிடுங்கள்!!
லிண்டா குறுக்கே பாய்ந்து தடுத்தாள். குண்டு குறி தவறியது.
செத்துத் தொலை!
டுமீல்!
அப்பா...

ஆலன் தோளில் குண்டு பாய்ந்தது!
இப்பொழுது பிழைத்துக் கொண்டாய்! இனி உன்னை இங்கே பார்த்தால், சுட்டுத்தள்ளுவேன்! ஓடிப்போய்விடு!

ஆலன் உடனே எங்கோ கிளம்பிவிட்டான்.

மறுநாள் காலை. காளைகளுடன் பாட் கிளம்பினான்.
ஆலனுக்குப் பதில் டாவிஸ் என்பவன் வந்தான்.

முதலில் காளைகளை ரெயிலில் ஏற்றிவிட்டார்கள்.

பத்து மைல் தூரத்தில் ரெயில் பாதை முடிந்தது.
காளைகள் வந்து விட்டனவா?
இதோ, இறக்கிவிடப் போகிறோம்.

வேன்களில் இருந்து காளைகள் இறக்கப்பட்டன.
எவ்வளவு கம்பீரமான காளைகள்!
இவ்வளவு அழகான காளைகளை நான் பார்த்ததே இல்லை!

நல்லா கொழுத்துப் போயிருக்கின்றன! வேகமாக ஓட்ட முடியாது. மெல்லத்தான் போக வேண்டும்!
ஒரு சதித்திட்டம் உருவானது அவர்களுக்குத் தெரியாது.
காளைகள், வந்துவிட்டன!
டென்வருக்கு இங்கே இருந்து ஓட்டித்தான் போகவேண்டும்!
ஆனால், காளைகள் டென்வர் போகாது!
சொல்லாதே! செய்துகாட்டு, ஜான்!!

பாட் வழியில் தங்கினான்.
இன்று இரவு இங்கே தங்கி நாளைக் காலை போவோம்! கண் இமையைப் போலக் காளைகளைக் காக்க வேண்டும்!
இங்கே ஓநாய்கள் நடமாட்டம் உண்டு!

அதேநேரம் ஆலன் வேறு ஒருவரிடம் வேலைக்குச் சேர்ந்தான்.
ஆலன்! நீ மகாகெட்டிக்காரன் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்!

ஆனால், நான் குறைவாகத்தான் சம்பளம் கொடுப்பேன். கைநிறையக் கொடுக்க எனக்கு வசதியில்லை.
நான் உங்களுக்குக் கைநிறைய சம்பாதித்துக் கொடுக்கிறேன்.

முதலில் என் மந்தையை டென்வரில் விற்க வேண்டும்!
நான் நல்ல விலைக்கு விற்றுத் தருகிறேன்!

மறுநாள் காலையே ஆலன் மந்தையுடன் புறப்பட்டான்.
நீ பெரிய மந்தைகளை ஓட்டிப் போயிருப்பாய். ஆனால், இது சிறிய மந்தை.
மநதை எவ்வளவு பெரிது என்றாலும் வேலை ஒன்றுதான்.

அடுத்து ஒரே பாலைவனம்! உனக்கு பாலைவனம் நன்றாகத் தெரியும் அல்லவா?
பாலைவனம் எனக்கு என் உள்ளங்கை போல! நன்றாகத் தெரியும்.

அதேநேரம் பாட் காளைகளை பாலைவனம் வழியே ஓட்டிச் சென்றான்.
இந்தப் பாலைவனப் பாதை ஆலனுக்கு நன்றாகத் தெரியும்!
இனி முழுக்கப் பாலைவனந்தான்!
உஸ்! மெல்லப் பேசு! பாட் காதில் விழுந்தால், உன்னைத் தொலைத்துவிடுவான்!!

பாட் இந்தப் பாதையை அறிவான்!
ஆனால் ஆலன் அளவுக்கு அல்ல. எப்பொழுதும் ஆலன்தான் நமக்கு வழிகாட்டுவான்.

இரவு வந்தது.
இங்கே தங்குவோம். முதலில் நீ காவல் இரு, டாவிஸ் பிறகு ஆண்டர்சன்
சரி, பாட்!

டாய்ல் கண்விழித்துக் காவல் இருந்தான். எங்கும் ஒரே கும்மிருட்டு.
ஒரு நட்சத்திரம் கூட இல்லையே.
திடீர் என்று ஒரு காளை அலறியது!
பாலைவன ஓநாய்களாக இருக்குமோ?
ம்மா..ா..ா...

பாட் எழுந்து வந்தான்.
என்ன இரைச்சல்?
ம்ம்மே...!
காளை அலறுகிறது!
ம்ம்மே...!

காளைகளிடம் ஓடிவந்தார்கள்.
ஓநாயைக் காணோமே!
ஓடியிருக்கும்!

காலைக் கடித்து விட்டதே! எலும்பு தெரிகிறது. பார்!
இப்பொழுது என்ன செய்வது?
இனி இந்தக் காளை நடக்க முடியாது! சுட்டுக் கொல்லுவதைத் தவிர வேறு வழியில்லை!!

ஜேம்சுக்குத் தெரிந்தால் மிகவும் வருத்தப்படுவார்!
டமீல்...
இனி நாம் எல்லாருமே இரவு முழுக்க விழித்துக் காவல் இருக்க வேண்டும்!
கொளுத்தும் வெயிலில் அவர்களின் பயணம் தொடர்ந்தது!

இரவு முழுக்க விழித்துக் காவல் இருந்தார்கள்.

பயணம் தொடர்ந்தது!
நம்மிடம் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட இல்லை!
நாம் போகும் வழி சரிதானா?

பாட்டுக்கு இந்த வழி தெரியாது! மாடுகளைப பார், தாகத்தில் நாக்குகள் தொங்குகின்றன!

இப்படியே போனால், இரண்டு நாளில் காளைகள் செத்துவிடும்! நாமும் சாகவேண்டியதுதான்!

வழியில் ஒரு குளம்.
இது வறண்டு கிடக்கிறதே!
இன்னும் தள்ளிப்போனால், ஒரு குளம் வரும். ஆலன் ஒருமுறை காட்டினான்.
இன்னொரு முறை அவன் பெயரைச் சொல்லாதே! உன்னையும் தொலைத்துவிடுவேன்!
குளம் இருக்கும் இடத்தைத்தான் சொன்னேன்.

எனக்கும் தெரியும்! கிளம்புங்கள், அந்தக் குளத்துக்குப் போவோம்!

பகல் முழுக்க நடந்தும், குளத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இரவு வந்தது.
தாகத்தில் சுருண்டு விழுந்துவிடுவேன் போலிருக்கிறது!
இல்லை! இரவு முழுக்கக் காவல் இருக்க வேண்டும்.
அது எப்படி முடியும்? உயிர் போகிறது!

ளைப்பாலும் தாகத்தாலும் தூங்கிப் போனார்கள்!

திடீர் என்று காளையின் அலறல் கேட்டது.
ம்ம்மே...!

இன்னொரு காளை பலியா? அய்யோ... தூங்கிவிட்டோமே!
இத்தனை களைப்புடன் எப்படி விழித்திருக்க முடியும்!
பாட் ஆத்திரப்பட்டான்!
குதிரையில் ஏறு! பொல்லாத ஓநாய்களை சுட்டுப் பொசுக்க வேண்டும்!
கத்துகிறான். ஆனால், அவன் சொல்லுகிறபடி செய்வதுதான் நல்லது!

ற்று தூரத்தில் ஆலன் முகாமிட்டிருந்தான்.
ஆலன்! பாலைவன ஓநாய்கள் மாடுகளைப் பின்தொடர்ந்து வருமா?
வரும், ஜேம்ஸ்! ஆனால், இங்கே ஓநாய்களின் நடமாட்டம் இல்லை. இரண்டு கால் தடம்தானே தெரிகிறது!

அப்படி யென்றால்...
நீ இங்கேயே இரு. நான் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்!

ஆலன் குதிரையில் ஏறி வந்தான்.
எல்லாம் ஜேம்சின் காளைகள் அல்லவா? ஏன் தனியே நிற்கின்றன? ஒரு காளை காயம்பட்டுக் கிடக்கிறது...

ஆலன் அருகில் வந்து பார்த்தான்.
நான் நினைத்தது சரிதான். இது ஐந்தாம் படையின் வேலை! யார் அவன்?

ஆலன் திரும்பி வந்தான்.
பாட் வழி தவறி வந்துவிட்டான். யாரோ ஒரு சதிகாரன் காளைகளின் காலை முறிக்கிறான். நான் பாட்டுக்கு உதவ விரும்புகிறேன், ஜேம்ஸ்!
தாராளமாகச் செய், ஆலன். நான் மந்தையைப் பார்த்துக்கொள்ளுகிறேன்.
மறுநாள் காலை பயணம் தொடர்ந்தது.
நள்ளிரவில் நாம் ஓநாய்களைத் தேடிப் போயிருக்கக் கூடாது!
ஆண்டர்சன்! தாகம் உயிர் போகிறது. இங்கேயே செத்து விழுந்துவிடுவேன் போலிருக்கிறது!!

சற்று போனதும்-
ஆண்டர்சன்! அங்கே பார்! தண்ணீர்ப் பீப்பாய்கள்!!
வெறும் பீப்பாய்களாக இருந்தால்...?

அருகே வந்தார்கள்.
நிறையத் தண்ணீர்!
நமக்குப் போதும்! காளைகள், குதிரைகள் எல்லாரும் தாகம் தீரக் குடிக்கலாம்!
நஞ்சு கலந்த தண்ணீராக இருக்கும்!

நாகத்தால் சாவதைவிட இந்தத் தண்ணீரைக் குடித்து சாகலாம்!
இல்லை! இது நல்ல தண்ணீர்! எவ்வளவு சுவையாக இருக்கிறது என்று குடித்துப் பார்!

தாகம் தீரக் குடித்துப் புத்துணர்ச்சி பெற்றார்கள்.
ஆண்டர்சன்! பாலைவனத்தில் தண்ணீர் பீப்பாய்! அதிசயமாக இல்லை?
யாரோ கொண்டுவந்து வைத்திருக்கிறார்கள், டாவிஸ்.

யாராக இருக்கும்?
காதைக் கொடு! இது ஆலன் வேலையாக இருக்கும். நாம் டென்வர் போவது அவனுக்கு மட்டுமே தெரியும்.

அதேநேரம்– ஆலன் காலடித் தடத்தைப் பின்தொடர்ந்து போனான்.
யார் அந்த சதிகாரன்? ஜேம்ஸ் எவ்வளவு நல்லவர்! அவருக்கும் ஒரு பகைவன்?

கால் தடம் சற்று தூரத்தில் போய் முடிந்தது.
இன்று இரவு எப்படியும் இன்னொரு காளையைத் தீர்த்து விட வேண்டும்
ஆட்களைத் தீர்த்து விட்டு, காளைகளை நாம் கவர்ந்துகொண்டால் என்ன?
சூட்டு வெளிப்பட்டுப் போகும்! மெக்சிக்கோ முழுக்கவே இவ்வளவு கம்பீரமான காளைகள் கிடையாது இவை ஐரோப்பாவில் இருந்து வந்தவை.

வேலை முடிந்தால், நமக்கு பத்தாயிரம் டாலர் கிடைக்கும். அதோடு திருப்திப்படு!

ஆலன் திடீர் என்று வெகுண்டு எழுந்தான்!
பாலைவன ஓநாய்கள் நீங்கள்தானா?
யார் நீ!
பிடி அவனை!

ஆலன் புயல் வேகத்தில் செயல்பட்டான்! அவனது துப்பாக்கி இடி போல இயங்கியது! மின்னல் வேகத்தில் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்தன.
ஆ...!
டுமீல்!

ஒருவன் விழுந்தான்! இன்னொருவன் பதுங்கிக்கொண்டான்!
உனக்குத் தைரியம் இருந்தால், நேருக்கு நேர் வா!

நீ ஓநாய் ஆயிற்றே! எப்படி நேரே வருவாய்?
டுமீல்...
வருகிறேன், சுடாதே! என் கையில் குண்டு பாய்ந்துவிட்டது!
டுமீல்...!

"ஓநாய்" வெளியே வந்தான்.
சரி, சுடவில்லை. காளைகளை எப்படிக் காயப்படுத்தினாய்? சொல்!
சொல்கிறேன்! சொல்கிறேன்! சுட்டுவிடாதே!

இரும்புப் பொறியைக் காட்டினான்.
இந்த இரும்புப் பொறியை மாட்டின் காலில் மாடடி அமுக்குவீர்கள். ஓநாய் கடிதத்து போலக் காயம் ஏற்படும். அப்படித்தானே?
ஆமாம்.

நீ எப்படி எங்களைக் கண்டு பிடித்தாய்?
நீங்கள் ஓநாய்களைப் போல ஊளையிடவில்லை! ஒரு கிழவி கத்துவது போலிருந்தது! இரண்டு கால் தடம் வேறு. கண்டுபிடித்துவிட்டேன்!

ஓநாயை அழைத்துக்கொண்டு ஆலன் வந்தான்.
'பாட்! ஆலன் வருகிறான்.
உங்கள் காளைகளைக் கடித்துக் குதறிய ஓநாயை நான் பிடித்து வந்திருக்கிறேன்!

ஆலன் எல்லா விவரத்தையும் பாட்டிடம் சொன்னான்.
ஆலன்! என்னை மன்னித்துவிடு. எங்களுடன் வா.
இல்லை. நான் இப்பொழுது வேறு ஒருவரிடம் வேலைக்கு சேர்ந்துவிட்டேன். அவரது மாடுகளை டென்வருக்கு ஓட்டிப் போய்க கொண்டிருக்கிறேன்.

ஆலன் விடை பெற்றுச் சென்றான்.
ஆலன்தான் நமக்கு தண்ணீர்ப் பீப்பாய்களை வைத்திருக்கிறான் என்று நான் சொன்னேன் அல்லவா?
அவன் நம்முடன் வந்திருந்தால், நன்றாக இருக்கும்.

ஆலன் சட்டென்று நின்றான்!
யார்? டைமண்டு போலத் தெரிகிறதே! ஆட்களுடன் வருகிறானே!

தான் அனுப்பிய ஆட்களிடம் இருந்து தகவல் இல்லை என்றதும் டைமண்டே புறப்பட்டு வந்தான்.
அவர்கள் வேலையை முடிக்கவில்லை என்று நினைக்கிறேன். நானே காளைகளைத் தீர்த்துக் கட்டுகிறேன்!

ஜேம்ஸ் ஒழிந்தால்தான் என் தொழில் நன்றாக நடக்கும்! இந்தக் காளைகள் ஒழிந்தால், ஜேம்ஸ் காலி!

பாட்டின் பயணம் தொடர்ந்தது. ஆலனை விரட்டி அடித்ததுக்காகப் பாட் வருந்தினான்.
ஆலன் சுத்த வீரன். கோபம் என கண்களை மறைத்துவிட்டது. லிண்டாவுக்கு ஏற்ற கணவன் அவன்.

ஆலன் வேகமாகத் திரும்பி வந்தான்.
பாட்! ஆபத்து! டைமண்டு ஆட்களுடன் வருகிறான்!
காளைகளைக் கொன்று விடுவானே!

டைமண்டு வந்துவிட்டான்!
காளைகளை சுட்டுத் தள்ளுங்கள்! இவர்களை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்!
டுமீல்....
டுமீல்...
அதேநேரம்— ஜிம்மி மந்தையை விரட்டி வந்தான்.
டுமீல்!..
உம்! ஓடுங்கள் உள்ளே பாயுங்கள்!!

ஒதுங்குகள்! மாடுகள்! நம்மை நோக்கித்தான் பாயந்து வருகினறன!

மந்தையின் நடுவே ஆலன் குதிரையில் வந்தான்.
டுமீல்!

அந்த இடமே ஒரு போர்க்களம் போல ஆயிற்று.
டுமீல்...டுமீல்..
டுமீல்!

டைமண்டு ஆத்திரப்பட்டான்!
ஆலன்
எல்லாம் உன் வேலைதானா?
தொலைந்து போ!
டுமீல்!
டுமீல்.
முதலில்
உன்னை
ஒழிப்பேன்!

இதற்குள் மாடுகள் பாய்ந்து வந்துவிட்டன!
நன்றாக மாட்டிக் கொண்டேனே!!

குதிரை மிரண்டு ஓட டைமண்டு கீழே விழுந்தான்!

டுகள் அவனை மிதித்துத் தள்ளின!"
அ!
டைமண்டு நசுங்கிச் செத்தான்.
மாடுகளைக் கொல்ல நினைத்தவன் மாடுகளாலேயே செத்தான்!

எல்லாம் ஓய்ந்தது
பாட்! இவன் ஜிம்மி. என் முதலாளியின் மகன்.
ஜிம்மி! உன் உதவியை மறக்க மாட்டேன்! இன்னும் ஒரு உதவி

என்ன?!
ஆலனுக்காக என் மகள் காத்திருக்கிறாள். அவனை அனுப்பி வைப்பாயா?

ஆனால், டென்வர்க்கு மந்தையை ஓட்டிச் செல்ல ஆள் வேண்டுமே?

நானும் டென்வர்தானே வருகிறேன்! நாம் எல்லாரும் ஒன்றாகப் போவோம்!

அவர்கள் மந்தைகளை ஓட்டிச் செல்ல, ஆலன் வீட்டுக்கு வந்தான்.
ஆ! ஆலன்... நீ...நீ எப்படி...
ஆம் லிண்டா! நான்தான். உனக்குத் துணைக்கு உன் அப்பாவே என்னை இங்கே அனுப்பி வைத்தார்!
(முடிந்தது)